(3) அரசினர் தீர்மானங்கள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே—

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 183-வது விதியின்கீழ் 1972-73 ஆம் நிதியாண்டுக்குரிய அவையுரிமைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதினன்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) அறிவிப்பு.

(அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் அவையுரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப் பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 18—3—1972 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 20—3—1972 திங்கட்கிழமை பகல் 11-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21—3—1972 செவ்வாய்க்கிழமை பகல் 11-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினன்கிற்கு மேற்படுமாயின் 23—3—1972 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே உறுப் பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.